- **H.L தத்து** – முன்னாள் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியான தத்து அவர்கள் தேசிய மனித உரிமை ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். (தேசிய மனித உரிமை ஆணையத்தின் தலைவர் 5 ஆண்டுகள் அல்லது 70 வயது வரை பதவியில் இருப்பார். (1993 ல் ஏற்படுத்தப்பட்டது)).

- டெல்லி இந்திராகாந்தி விமான நிலையம் **ACI (Airport Council International)** என்ற அமைப்பால் 3 விருதுகள் சிறப்பாக செயல்பட்டதற்காக வழங்கப்பட்டுள்ளது

- **Ex Lamitye-** இந்தியாவும், சிச்சில்யா நாடும் இணைந்து மேற்கொண்ட இராணுவ கூட்டுப்பயிற்சி ஆகும்.

- ஹரியானா அரசு அண்மையில் முஸ்தபா பாத் என்ற பகுதியை சரஸ்வதி நகர் என்று மாற்றியுள்ளது. குறிப்பாக பழங்காலத்தில் சரஸ்வதி என்ற நதி இந்த இடத்தில் தான் ஓடியது என்பது குறிப்பிடத்தக்கது

- பெரு நாட்டில் இரண்டு எண்ணைக் குழாய்களின் கசிவால் நதிகள் மாசடைந்துள்ளது. இதன் காரணமாக அந்நாட்டில் நெருக்கடி நிலை கொண்டுவரப்பட்டது.

- **Force Eighteen-** பூனேயில் இந்தியா மற்றும் ஆசியா நாடுகள் இணைந்து மேற்கொள்ளும் ராணுவ பயிற்சியாகும்.

- **World Economic Forum** -ஆல் அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி உலகில் அனைவருக்கும் மின்சார வசதி மற்றும் குறைந்த விலையில் மின்சார வசதி அளிக்கும் நாடுகளின் பட்டியலில் இந்தியா 190 வது இடத்தை வகிக்கிறது.

- **AWACS – Airborne Warning and Control Systems** - இஸ்ரேலில் இருந்து இரண்டு ரேடார்களை வாங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இது எதிரிகளின் ஏவுகணைகளை துள்ளியமாக ஆராய்ந்து நமக்கு தகவல்களை அளிக்கும்.

- **Forbus** – நாளேட்டின் அறிக்கையின்படி மைக்ரோசாப்.்.ட் நிறுவனத்தின் தலைவர் உலகளவில் பணக்காரர்களின் பட்டியலில் முதலிடத்தை வகிக்கிறார்.

- மார்ச் 3- உலக வனவிலங்குகள் தினமாக கடைபிடிக்கப்படுகிறது. குறிப்பாக இந்த ஆண்டு யானைகளின் பாதுகாப்பு பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.
- ஐக்கிய நாட்டு சபையின் பாதுகாப்பு சபை வட கொரியாவின் அணு ஆயுத சோதனைக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க திர்மானம் கொண்டுவந்துள்ளது

- சேது பாரதத் திட்டம் இந்த திட்டத்தின்படி இந்தியாவிலுள்ள எல்லா ரயில்வே **level crossing** பகுதிகளில் விபத்து ஏற்படாமல் தடுக்க நடவடிக்கை எடுக்கும் திட்டமாகும்.

- மனோஜ்குமார் - இயக்குனர் மற்றும் நடிகரான இவருக்கு 2015ம் ஆண்டிற்கான தாதாசாகேப் பால்கே விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விருது 1969ம் ஆண்டிலிருந்து திரைப்பட துறையினருக்கு வழங்கப்படுகிறது.

- **Saansad Adarsh Gram Yojana**- திட்டத்தின் அடிப்படையில் பிரதமர் அவர்கள் நாகேபூர் கிராமத்தை தேர்ந்தெடுத்துள்ளார். இத்திட்டத்தின்படி 2019-2024 க்குள் அதை ஒரு முன்மாதிரி கிராமமாக உருவாக்குவதாகும்.

- 2016ம் ஆண்டு ஆசிய **T20** கிரிக்கெட் கோப்பையை இந்தியா பங்ளாதேஷை வீழ்த்தி வென்றது.

- **Raymond Tomlinson – E mail** முறையை கண்டுபிடித்த இவர் அண்மையில் காலமானார்.

Unique IAS Academy

- **Mahila E-HAAT** – ஆன்லைன் வர்த்தக மையத்தை பெண்கள் தொழில் முனைவோருக்காக மத்திய அரசு உருவாக்கியுள்ளது.

- ரஷ்ய நாட்டு டென்னிஸ் வீராங்கனையான மரியா ஷரபோவா ஊக்க மருந்து தொடர்பாக விளையாட்டு போட்டிகளிலிருந்து தடை செய்யப்பட்டுள்ளார்.

- கொச்சி, கோயம்புத்தூர், புவனேஸ்வர் போன்ற நகரங்களை ஸ்மார்ட் நகரங்களாக உருவாக்க ஜெர்மனி அரசுடன் இந்திய அரசு உடன்படிக்கை மேற்கொண்டுள்ளது.

- மார்ச் 8 – பன்னாட்டு பெண்கள் தினமாக கடைபிடிக்கப்படுகிறது.

- பிரிக்ஸ் நாடுகளின் **friendship cities** கூட்டம் மும்பையில் நடைபெற உள்ளது.

- முக்கிய மந்திரி சந்த்வானா ஹரிஸ் யோஜனா – விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 48 மணிநேரம் அளிக்கப்படும் சிகிச்சைகளுக்கான செலவுகளை அரசே ஏற்றுக்கொள்ளும் கர்நாடக அரசின் திட்டமாகும்.

- **Maritime India Summit** 2016- இந்தியப் பெருங்கடல் பகுதிகளில் பாதுகாப்பு மேற்கொள்வது குறித்த 57 நாடுகள் மேற்கொள்ளும் மாநாடு மும்பையில் நடைபெற்றது.

- **Shakthi IV-** இந்தியா, இந்தோனேஷியா இணைந்து நடத்திய ராணுவ கூட்டுப்பயிற்சி இந்தோனேஷியாவில் நடைபெற்றது

- **ISRO IRNNS -1F-** செயற்கை கோள் ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து வெற்றிகரமாக ஏவப்பட்டது.

Unique IAS Academy

- பிரதான் மந்திரி உஜ்வாலா யோஜனா – வறுமைகோட்டிற்கு கீழ் உள்ள பெண்களுக்கு கேஸ் சிலிண்டர் வாங்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட புதிய திட்டமாகும்.

- **Balbir Singh Chauhan** – 21 வது சட்டக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

- **Kalam Climate Fellowship** அமெரிக்காவில் உலக வெப்பமயமாதல் தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் இந்திய மாணவர்களுக்கு இந்திய மற்றும் அமெரிக்க அரசால் உதவித்தொகை அளிக்கும் திட்டமாகும்.

- ஆனந்த் மகேந்திரா அவர்களுக்கு பிரெஞ்சு நாட்டின் **Legion d'Honneur** பட்டம் வழங்கப்பட்டது.

- **UJALA** மின்சாரத்தை சேமிப்பதற்காக அனைத்து மக்களுக்கும் குறைந்த விலையில் **LED** பல்புகளை வழங்க மத்திய அரசு கொண்டு வந்த திட்டமாகும்.

- அண்மையில் இந்திய அரசு மியான்மர் நாட்டிற்கு **diesel-electric locomotives** ரயிலை உடன்படிக்கையின்படி அழைத்து உதவி செய்தது.

- அலகாபாத் நீதிமன்றம் உருவாக்கப்பட்டு 150 வது ஆண்டு அண்மையில் கொண்டாடப்பட்டது. இது 1866 ல் உருவாக்கப்பட்டது.

- இந்திய ஐக்கிய நாட்டு சபையின் நீடித்த வளர்ச்சி இலக்கை அடைய வேண்டும் என்ற புதிய திட்டத்தில் உடன்படிக்கை மேற்கொண்டுள்ளது.

Unique IAS Academy

- அக்னி 1- அணு ஆயதத்தை ஏந்தி செல்லும் நிலத்திலிருந்து நிலத்தை நோக்கி பாயும் அக்னி 1 ஏவுகணை வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது.

- அண்மையில் இந்திய அரசு கரக்பூர் அணுமின் நிலையத்தை அணு கசிவுகளின் காரணமாக நிறுத்தியுள்ளது.
  அண்மையில் வெளியிடப்பட்ட மத்திய அரசின் அறிவிப்பின்படி இந்தியாவில் அழிந்துகொண்டு வரும் விலங்குகள் மற்றும் பறவைகளின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளது.

- **ExoMars** – ஐரோப்பா மற்றும் ரஷ்யா நாடுகள் இணைந்து செவ்வாய் கிரகத்திற்கு அனுப்பிய ஆளில்லா விண்கலம் ஆகும்.

- அன்னை தெரசா- அவர்களுக்கு ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் புனிதர் பட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. (இவர் 1910 ம் ஆண்டு கொசோவா நாட்டில் பிறந்தார். தற்போது மாசிடோனியா நாடாக உள்ளது. இவர் 1962 ம் ஆண்டு ராமன் மக்சசாய் விருதும் அதே ஆண்டு பத்மஸ்ரீ விருதும் 1979ம் ஆண்டு அமைதிக்கான நோபல் விருதும் 1980 ல் பாரத ரத்னா விருதும் பெற்றுள்ளார்.

- **Htin Kyaw** – மியான்மரில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய குடியரசு தலைவராவார். இவர் ஹன்சாசியூகி கட்சியான **National League for Democracy** யை சார்ந்தவர்.

- மார்ச் 15 – பன்னாட்டு நுகர்வோர் தினமாக கடைபிடிக்கப்படுகிறது.

- உலக நாடுகளில் சந்தோஷமாக மக்கள் வாழும் நாடுகளின் பட்டியலில் ஐக்கிய நாட்டு சபையின் அறிக்கையின்படி இந்தியா 157 நாடுகளில் 118 வது இடத்தை வகிக்கிறது **(World Happiness Index)**

Unique IAS Academy

- **Andrew Wiles** - இங்கிலாந்து நாட்டை சார்ந்த கணித மேதையான இவருக்கு 2016 ம் ஆண்டிற்கான **Abel** விருது வழங்கப்பட்டுள்ளது.

  இந்த விருது கணிதத்தில் சிறந்து விளங்குபவர்களுக்கு நார்வே அரசால் 2001 ம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

- புதுதில்லியில் உலக இஸ்லாமிய சூஃபிகளின் மாநாடு அண்மையில் நடைபெற்றது.
- **Drishti** – விமான ஓட்டுநர்களுக்கு சிறந்த முறையில் வான்வழித் தகவல்களை அழிப்பதற்காக **Indian Mateorology** துறையால் உருவாக்கப்பட்டுள்ளது.

- **Iron-fist** 2016 இந்திய விமானபடையால் பொக்ரானில் மேற்கொண்ட போர்படை பயிற்சி ஆகும்.

- சூரத் ரயில்வே நிலையம் - இந்திய ரயில்வே துறையால் மிகவும் சுத்தமாக பராமரிக்கப்படும் ரயில் நிலையமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

- மார்ச் 19 ம் தேதி உலக **Earth Hour** 2016 கடைபிடிக்கப்பட்டுள்ளது

- **Kisan Suvidha** விவசாயிகளுக்கு தொலைபேசி மூலம் தகவல்களை வழங்கும் அப்ளிகேஷன் திட்டமாகும்.

- மார்ச் 20- உலக சிட்டுக்குருவிகள் தினமாக கடைபிடிக்கப்படுகிறது.

- **Arnvesh** – கடலோர பாதுகாப்பு கப்பல் அண்மையில் இந்திய கடற்படையில் சேர்க்கப்பட்டது.

Unique IAS Academy

- இந்தியாவிலுள்ள அகஸ்திய மலை உயிர்கோளப்பகுதி யுனெஸ்கோவால் அங்கீகரிக்கப்பட்டு அதன் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.
  இந்தியாவிலுள்ள 18 உயிர்கோள பகுதிகள் உள்ளன. அதில் 9 யுனெஸ்கோவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது
  நீலகிரி, மன்னார் வளைகுடா, சுந்தர வனம், நந்தாதேவி, நாக்ரேக், பஞ்சமாரி, சிமிலிபல், அச்னக்மர் மற்றும் **Great Nicobar.**

- மார்ச் 22- உலக தண்ணீர் தினமாக கடைபிடிக்கப்படுகிறது.

- மார்ச் 23- **World meteorological day**

- ஜெய்தபூர் பகுதிகளில் 6 அணு உலைகளை நிறுவ இந்தியாவும், பிரான்சும் உடன்படிக்கை மேற்கொண்டுள்ளது.

- மார்ச் 24- உலக **TB** தினமாக கடைபிடிக்கப்படுகிறது.
- ஆஸ்திரேலிய அணியின் **Shane Watson** பன்னாட்டு கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

- பிரதான் மந்திரி அவாஸ் யோஜனா கிராமின் - கிராமப்புற பகுதிகளில் உள்ள ஏழைகளுக்கு வீட்டு வசதி செய்து தரும் திட்டமாகும்.

- உத்ரகாண்ட் மாநிலத்தில் குடியரசு தலைவர் ஆட்சிமுறை அமல்படுத்தப்பட்டது.

- 112 அவசரகாலத்தில் பயன்படுத்தப்படும் எண்ணாக இந்த எண் இனி பயன்படுத்தப்பட உள்ளது.
- இந்தியா மற்றும் ஐரோப்பியா கூட்டமைப்பின் 13 வது மாநாடு பெல்ஜியம் தலைநகர் பிரசில்ஸ்சில் நடைபெற உள்ளது

Unique IAS Academy

- உலக நாடுகளின் அணு ஆயுத குறைப்பு மாநாடு பிரசில்ஸ்சில் நடைபெற்றது

- ஆசியாவின் மிகப்பெரிய ஆப்டிக்கல் டெலஸ்கோப் ஆர்யபட்டா ஆராய்ச்சி மையத்தினால் தேவஸ்தல் என்ற இடத்தில் நைனிடால் மாவட்டம் உத்ரகாண்ட் மாநிலத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.

Unique IAS Academy